[8th December 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இரண்டு சட்டங்களுக்கும் அதிக வித்தியாசம் இல்லை. இப்பொழுது, மத்திய சர்க்கார் சட்டப்படி ராஜ்ய சர்க்கார் அமல் நடத்தும். அந்த அதிகாரம் ராஜ்ய சர்க்காரிடம்தான் இருக்கும்.

Police bandobust during Municipal elections

*48 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) 1959-ல் நடந்த நகராட்சி மன்றத் தேர்தல்களில் எத்தனை நகரங்களுக்கு ஆயுதந்தாங்கிய போலீசார் (Armed Police) அனுப்பப்பட்டனர்?

(ஆ) இவர்களுக்காக செலவான தொகை எவ்வளவு?

(இ) இவர்களால் எத்தனை இடங்களில் லத்தி சார்ஜ், துப்பாக்கி பிரயோகம் நடத்தப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A statement [a] is placed on the table of the House.

(c) The Police did not have recourse to lathi charge or fire arms at any place during the last municipal elections.

SRI S. M. ANNAMALAI : மதுரை டவுனுக்கு ரூ. 5,060.70 செலவானதாகக் கண்டிருக்கிறது. அதனால், அங்கு கலவரம் அதிகம் என்று கருத்தா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மதுரை பெரிய நகரம் என்பதுதான் அதற்குக் காரணம்.

SRI A. A. RASHEED : Was the Police force sent at the request of the parties or by the Government themselves?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Police have their own responsibility and whenever there is apprehension of disturbance of law and order, they take their own measures.

Report on Secondary Education

*49 Q.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Education Committee set up under the terms of the G.O. No. 1276, Education, dated 24th June 1958 has submitted its recommendations regarding secondary education;

(b) whether the Committee invited suggestions from the teachers and other organizations; and

(c) if so, the details thereof?

---

[a] Printed as Appendix III on page 217 infra.

8th December 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Committee has submitted its first list of recommendations. This was published and suggestions invited from all those interested. After scrutinizing the suggestions received, the Committee has finalized its report and has submitted it to Government.

(*c*) The suggestions received were considered by the Committee. They were not formally communicated to Government.

SRI N. K. PALANISAMI : பப்ளிக் ஸ்கூலில் இருக்கக் கூடிய ஆசிரியர்கள் சம்பளத்தைப் பொருத்து சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்கள் சம்பளத்தையும் அதே முறையில் வைக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தக் கமிட்டி பல சிபாரிசுகள் செய்து இருக்கிறது. பரிசீலனை செய்து அதிலே சர்க்கார் முடிவு எடுக்கவேண்டும். அந்த விஷயம் பற்றி அவர்கள் அறிக்கையிலே இருந்தால், அது பற்றியும் ஆலோசனை செய்யப்படும்.

SRI M. KALYANASUNDARAM : அந்த சிபாரிசுகளின் மேல் முடிவு எடுக்கும் முன்பு, அவற்றை கல்வி ஆலோசனைக்குழு முன்பு வைத்து, அவர்கள் அபிப்பிராயத்தையும் கேட்டு முடிவு எடுப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆமாம். சென்ற கூட்டத்தில் அது அறிவிக்கப்பட்டது ; அங்கத்தினர் அந்தக் கூட்டத்திற்கு வரமுடியாது போனதால், அது அவர்களுக்குத் தெரியவில்லை. அது அடுத்த கூட்டத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

National Cadet Corps

* 50 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to raise the standard and status of the National Cadet Corps?

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no specific proposal to raise the standard of the N.C.C.; but every effort is being made at all levels to raise the standard of training and administration in the N.C.C. Units. As regards status, the post of Director, N.C.C. at the Ministry of Defence, New Delhi, has been upgraded and an Officer of the rank of Major-General has been appointed. At State level the proposal to upgrade certain posts of Circle Commanders is also under consideration.

SRI N. K. PALANISAMI : என்.சி.சி. அவர்களை அப்-க்ரேட் செய்யக்கூடிய விஷயமாக மத்திய சர்க்காரிடமிருந்து நமது சர்க்காருக்கு ஏதாவது பண உதவி கிடைத்திருக்கிறதா ? அப்படியானால் அதை எந்த வகையில் செலவு செய்ய உத்தேசம் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 'அப்-க்ரேட்' பண்ணுவதாக ஒன்றுமில்லை என்று பதிலில் சொல்லி இருக்கிறேன். அவர்களை எந்த அளவில் அப்-க்ரேட் செய்வது, என்ன அபிவிருத்தி செய்வது என்பவைகளுக்கு எல்லாம் முயற்சி செய்யப்பட்டு வருகிறது.